# ஸ்ரீகாஞ்சி காமகோடி பீட ஜகத்குரு சந்நிதி துதி

(முதா கரத்த மோதகம் எனும் மெட்டு)



பராபரத்தின் பக்குவம் உதாரணத்து நற்குணம்
சதாசிவத்தின் தத்துவம் சதாஜபிக்கும் முக்கியம்
கனாவினாவின் நித்திலம் தனாலறிந்த நித்தியம்
மனோவிசாரம் மாற்றிடும் மஹாசந்நி தானமே

ஹரேமுராரி மாதவம் ஹராசிவாய மந்திரம்
ஒரேபரத்தில் ஆழ்த்தியே உயர்த்திடும் நிறைத்தவம்
நிகழ்த்திடும் மகத்துவம் நெறித்திறம் ஜகத்குரு
உயர்த்தருள் விதைத்திடும் உயர்ந்த ஞானபீடமே

விதானகாஞ்சி தந்ததான சிந்தையாளும் ஸ்ரீமடம்
நிதானஞான உதாரதான தயாளனான குருபரா
பூமிநாத சாமியான ஞானஆதி சங்கரர்
காமகோடி பீடமாள மீண்டெழுந்து வந்தவர்

பெரியவாளுக் குரியவேளாய் பெருமையான மாதவா
அரியஞானம் துரியமாகும் அமிர்தபானம் பருகியே
பொருத்தமான கருத்துயாவும் திருத்தமாக விருத்தியே
சிறப்பினாலே குருக்களான பொறுப்பிலாளும் மங்களா

ஜெயேந்திராதி சங்கராவி ஜயேந்திரஞான புங்கவா
பஜேபாத பங்கஜம் பரமஞான சந்நிதி


மீ. ராஜகோபாலன் (rajjag@gmail.com)